**மெல்ல கற்போருக்கான வினா-வங்கி**
**மற்றும்**
**தேர்ச்சி அடைய தரவேண்டிய பகுதிகள்**
**பத்தாம் வகுப்பு – தமிழ்**

## தமிழ் முதல் தாள்

### குறுவினாக்கள் (2மதிப்பெண்)

1. கையுறைப் பொருள்களாகக் குகன் கொண்டு சென்றன எவை? யாருக்குக் கொண்டு சென்றான்?
2. குகன் இராமனைக் கண்டு எவ்வாறு பணிந்து வணங்கினான்?
3. குகனின் வேண்டுகோள் யாது?
4. அன்புள இனி நாம்ஓர் ஐவர்கள் உளரானோம் – யார், யாரிடம் கூறியது?
5. வயலின் வரப்புகளாகக் கூறப்படுவன யாவை?
6. வயல் தரும் விளைவுகளாகத் தமிழ்விடுதூது கூறுவன யாவை?
7. போலிப்புலவர்களைத் தண்டிப்போர் யாவர்?
8. ஆற்றுதல் என்பது யாது?
9. பண்பு எனப்படுவது யாது?
10. அறிவு எனப்படுவது யாது?
11. கலம்பக நூல்களுள் முதல்நூல் எது?
12. கலம்பக உறுப்புகள் நான்கனை எழுதுக.
13. நந்திக் கலம்பகம் யார்மீது பாடப்பெற்றது?
14. நந்திவர்மன் வீரம் எத்தகையது?
15. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன?
16. குலசேகரர் எவ்வெம் மொழிகளில் வல்லவர்?
17. மொழிமாற்றம் என்றால் என்ன?
18. கல்விப்படங்கள் வாயிலாக நாம் அறிவன யாவை?
19. திரைப்படச்சுருள் பற்றி நீவிர் அறிவன யாவை?
20. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை?
21. ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?
22. ஞாலம் – பெயர்க்காரணம் கூறுக.
23. கண்ணிடத்து அப்பியவர் யார்? இதில் கூறப்படும் செய்தி யாது?
24. இராமலிங்கர் எங்கு, எப்போது பிறந்தார்?
25. வள்ளலாரின் முழக்கம் யாது?
26. சத்திய தருமச்சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது?
27. ஒவ்வொருவரும் குறைந்தது எக்கல்வித் தகுதியினைப் பெறுதல்வேண்டும்?
28. தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில்நுட்பத் துறைகள் யாவை?
29. பட்டப்படிப்புகளில் எவையேனும் நான்கனை எழுதுக.
30. இடைநிலையாசிரியர் பயிற்சி குறித்து எழுதுக.

### சிறுவினாக்கள் (4 மதிப்பெண்)

1. கம்பராமாயணம் – சிறுகுறிப்ப வரைக.
2. சீதை, இலக்குவன் ஆகியோரிடம் குகனைப்பற்றி இராமன் கூறியதென்ன?
3. விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை?
4. சீறாப்புராணம் குறிப்பு எழுதுக.
5. புலியின் கொடுஞ்செயல்கள் பற்றி உமறுப்புலவர் கூறுவன யாவை?
6. நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.
7. சாதனைப் பூக்கள் என்று எவற்றை இளந்திரையன் சுட்டுகிறார்?
8. பெண்கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துகள் யாவை?

9. பெண்ணுரிமையை விளக்குக.
10. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை?
11. பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும்?
12. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.
13. பேச்சுக்கலையில் மொழியும் முறையும் எவ்வாறு அமைதல் வேண்டும்?
14. கடல் வாணிகம் குறித்து எழுதுக.
15. உழவுத் தொழில் குறித்து எழுதுக.

**தமிழ் இரண்டாம் தாள்**

1. கடிதங்கள் (13 கடிதங்கள்)
2. கட்டுரைகள் (காலத்தை வெல்லும் கணினி, மழைநீர்சேகரிப்ப, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சிக்கனமும் சேமிப்பும்)
3. பாநயம் பாராட்டுதல் பகுதி
4. அணி
5. சூழல் வினா விடைப் பகுதிகள்
6. ஆங்கிலச் சொற்களை அறிந்து எழதுதல்
7. வங்கிப் படிவம்
8. ஒரு மதிப்பெண் வினா விடை
9. கவிதை எழுதுதல்
10. அரபு – தமிழ் எண்

அன்புடைய ஆசிரியர்களுக்கு,

வணக்கம். **கற்றல் குறைந்த மாணவனை எளிதில் தேர்ச்சியடைய சில பகுதிகள் இருக்கின்றன.**

**தமிழ் முதல் தாள் (செய்யுளும் உரைநடையும்)**

| | | |
|---|---|---|
| 1. | ஒரு மதிப்பெண் வினா-விடை | 20 மதிப்பெண் |
| 2. | குறுவினா | 20 மதிப்பெண் |
| 3. | மனப்பாடம் | 10 மதிப்பெண் |
| 4. | பாடல் மற்றும் உரைநடை வினா-விடை | 10 மதிப்பெண் |

**தமிழ் இரண்டாம் தாள்**

| | | |
|---|---|---|
| 1. | கடிதம் (புத்தகத்தில் உள்ள 13 பயிற்சி) | 10 மதிப்பெண் |
| 2. | அணி | 5 மதிப்பெண் |
| 3. | பா நயம் பாராட்டுதல் | 5 மதிப்பெண் |
| 4. | சூழல் வினா – விடை | 5 மதிப்பெண் |
| 5. | வங்கிப் படிவம் நிரப்புதல் | 5 மதிப்பெண் |
| 6. | ஆங்கிலச் சொற்களை அறிந்து எழுதுதல் | 5 மதிப்பெண் |
| 7. | ஒரு மதிப்பெண் வினா – விடை | 20 மதிப்பெண் |
| 8. | கவிதை எழுதுதல் | 5 மதிப்பெண் |
| 9. | அரபு – தமிழ் எண் எழுதுதல் | 2 மதிப்பெண் |
| 10. | கட்டுரை (முன்னுரை – கருத்துரை – முடிவுரை மட்டும) | 3 மதிப்பெண் |

## முதல்தாளில் பயிற்சி அளிக்கும் வழி

இப்பகுதிகளில் மீண்டும் மீண்டும் தேர்வு வையுங்கள். ஒரு மதிப்பெண் பொருத்தவரை அருகில் அமர்ந்து கேள்விகளைக் கேளுங்கள். பதிலைச் சொல்ல வையுங்கள். பிறகு மாணவரைக் கரும்பலகையில் எழுதிக் காட்டச் சொல்லுங்கள். கடைசியாகத் தேர்வு வையுங்கள்.

ஒரு வாரப் பாடவேளையில் குறுவினாக்களை (ஒரு பாடவேளையில் 5 வினாக்கள்) முடித்துவிடவும். அடுத்த வாரத்திற்குள் சிறுவினாக்களை (ஒரு பாடவேளைக்கு இரண்டு, மூன்றாக) முடித்துவிடவும். மனப்பாடத்தைப் பொறுத்தவரை மாணவர்களை ஒப்பிக்க வைக்கவும். பிறகு எழுத வைக்கலாம். தவறானால் தவறில்லை. பாடல், உரைநடைப் பகுதிகளைத் தந்து வினாக்களை உருவாக்கச் செய்யவும்.

## இரண்டாம் தாளில் பயிற்சி அளிக்கும் வழி

இப்பகுதியில் கடிதங்களை முழுவதுமாக வாசிக்க வையுங்கள். நீங்கள் அருகில் அமர்ந்திருக்கவேண்டும். கடித உறுப்புகளின் மதிப்பெண்ணை மாணவருக்குச் சொல்லி விளக்குங்கள். ஒரு கடிதத்தை எழுதிக் காட்டிப் பொருளையும் பெறுநர் முகவரியையும் மாற்றித் தந்து எழுத வையுங்கள்.

பா நயத்தில் எதுகை, மோனை, இயைபு, சந்த நயம், பா வகை கண்டறிந்து காட்டுங்கள். பிறகு ஒரு பாடலைக் கொடுத்துக் கண்டுபிடித்துக் காட்ட விழையவும்.

பாடலைக் கொடுத்து. பொருள் கூறி, அந்த அணியின் வகையைக் கூறுங்கள். அதன் உறுப்புகளை எழுத வையுங்கள். (அணி சுட்டல், விளக்கம், பொருத்தம் இப்படி)

சூழலைக் கதையாகச் சொல்லி வினாக்கள் தொடுக்கவும். மாணவர் கண்டிப்பாக விடை தருவார். அதை எழுதச் சொல்லித் திருத்தித் தாருங்கள்.

3 படிவங்களை நிரப்பிக் காட்டுங்கள். அதற்கான காரணத்தைக் கூறுங்கள். புதிய படிவங்களைக் கொடுத்து, அதை நிரப்ப உதவுங்கள் போதும்.

ஆங்கிலச் சொற்கள் எது, தமிழ்ச்சொல் எது என்று அடையாளம் காட்டி, விடை கூறிப் பின்பு, அவர்களை விடைகூறச் செய்யுங்கள்.

5 தலைப்பிற்கான கவிதைகளை எழுதச் செய்யுங்கள். அல்லது மாதிரிகளைத் தந்து, மனனம் செய்து எழுத வையுங்கள்.

அரபு எண்களை எழுதித் தமிழ் எண்களை எழுதச் செய்யுங்கள். அவர்களின் தேர்வு எண்ணிற்கான தமிழ் எண்களை எழுதச் செய்வதின் மூலம் 2 மதிப்பெண் கிடைக்க வழி இருக்கிறது.

ஒவ்வொரு கட்டுரையின் முன்னுரை, கருத்துரை, முடிவுரை, சில உட்தலைப்பில் ஒருசில கருத்துகளை எழுத வையுங்கள். ஓரளவு மதிப்பெண் பெற வாய்ப்பிருக்கிறது.

## மற்றும்

மாலைவேளை, வார விடுமுறை நாட்களில் நடைபெறும் சிறப்பு வகுப்புகளுக்குக் கற்றல் குறைந்த மாணவர்களை மட்டும் வரவழைத்துப் பயிற்சி அளியுங்கள். வெற்றி நிச்சயம் தான். ஏ4 தாளில் அல்லது தனி பயிற்சி ஏட்டில், நாள் எழுத வைத்துப் பயிற்சி அளியுங்கள். தொகுத்து மாணவர்களிடம் தாருங்கள்.

**வாழ்த்துகளுடன்**

**ரா.தாமோதரன், அ.மே.நி.பள்ளி, மெலட்டூர் 614 301**